## உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் - (புற நெகும) - 2017

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 இன் 2790–எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) மற்றும் 2016 நவம்பர் 02 இன் 3431 – எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவுள்ளதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. கணக்களிக்கும் பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைதல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். நீடித்த சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அபிவிருத்தி குறைந்த 07 மாகாண பிரதேசங்களிலுள்ள தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் பின்தொடர் கடன்களின் நோக்கமாகும். ஆகையினால், நீர் விநியோக முறைமையின் முன்னேற்றம், உட்கட்டமைப்பு, உள்ளூராட்சி அரசினால் வழங்கப்படும் அடிப்படை வசதியின் கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் கொள்திறன் வலுப்படுத்தலினை முன்னேற்றுதலுடன் தொடர்புடைய விடயமொன்றினை விபரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டன. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. எவ்வாறாயினும், சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கெதிராக ஐ.அ.டொலர்களின் மதிப்பேற்றம் காரணமாக இணங்கப்பட்ட கடன் வழங்கும் முகவரின் பங்களிப்பு தொகையானது ரூபா 7,892 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 52.04 மில்லியனாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும், அதனைத்தொடர்ந்து கடன் உடன்படிக்கையினால் ஐ.அ.டொலர் 67.84 மில்லியனாக தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் ரூபா 8,700 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் (எஸ்டீஆர் 43.30 மில்லியன்) ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்புச் செய்யப்படல் வேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து செயற்திட்டத்தின் காலப்பகுதி 2017 யூன் 30 வரை நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது. மேலும், பின்தொடர் கடன் உடன்படிக்கைகளின் கீழான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2020 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட்ட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | -2790 | 59.00 | 7,670.00 | 1,050.00 | 6.89 | 1,048.75 | 51.27 | 7,221.13 |
| | -3431 | 60.00 | 8,700.00 | 500.00 | 2.31 | 354.45 | 2.31 | 354.45 |
| இலங்கை அரசாங்கம் | | 17.57 | 2,401.10 | 342.00 | 2.07 | 314.98 | 10.03 | 1,417.90 |
| **மொத்தம்** | | **136.57** | **18,771.10** | **1,892.00** | **11.27** | **1,718.18** | **63.61** | **8,993.48** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

2790 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தினை தயாரிப்பதற்கான தொழில்நுட்ப உதவி அறிக்கையின் பொது நிபந்தனைகளின் பிரகாரம், தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் அவர்களின் நிர்வாகக் கட்டிடங்களினை நிர்மாணிப்பதற்கும், உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய சமூக வசதிகளின் முன்னேற்றங்களுக்கு ரூபா 50 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடுசெய்வதற்கு செயற்திட்டம் இணங்கியிருந்தது. செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 40 நிர்வாக கட்டிடங்களின் நிர்மாணம், 21 உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி வேலைகள், 89 சமூக வசதிகளின் முன்னேற்றங்கள் மற்றும் 25 நீர் விநியோக திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் 03 ஏனைய அபிவிருத்தி வேலைகள் போன்ற அபிவிருத்தி வேலைகள் 161 உள்ளூராட்சி சபைகளில் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 3431 – எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதியளிப்பு உடன்படிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்ட 64 நீர் விநியோக திட்டங்களில், வடமேல், வடமத்தி, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் 08 நீர் விநியோக திட்டங்களின் முன்னேற்ற வேலைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுவான அம்சமொன்றாக, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் தரக் குறைபாடுகள் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கள விஜயங்களில் வெளிப்பட்டிருந்தன. தென் மாகாணத்திலுள்ள சூரியவெவ பிரதேச சபையின் மீன் சந்தை வளாகத்தில் ரூபா 44.93 மில்லியன் மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட எல்லைச் சுவரின் 40 இடங்களில் வெடிப்புக்கள் தோன்றியிருந்தன. மேலும், தென் மாகாணத்திலுள்ள கரன்தெனிய, திஸ்ஸமஹாராம மற்றும் கடுவான சபைகளினால் மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள கண்டி கடவத்சதர மற்றும் கங்காவத்த கொறளை பிரதேச சபைகளினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் குறைபாடுகள் எனது முன்னைய ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் கூட சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. பல உள்ளூராட்சி சபைகளால் அமுல்படுத்தப்பட்ட சிவில் நிர்மாண வேலைகள் தர நியமத்தை பின்பற்றக் கூடியதாக சரியான முறையில் மேற்பார்வை செய்யப்படாதமையை உறுதிப்படுத்தியிருந்தது.

(ஆ) தென் மாகாணத்திலுள்ள ஹபராதுவ பிரதேச சபையின் நூலகமொன்று மற்றும் ஆயுர்வேத மருத்துவ நிலையத்திற்கான கட்டிடமொன்றின் நிர்மாண ஒப்பந்தத்தின் கீழுள்ள வேலைகள் ரூபா 53.18 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 2017 ஆகஸ்ட் 18 இல் வழங்கப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், தொடர்புடைய கட்டிடத்தின் அத்தியாவசியத்தினை கருத்திற்கொண்டு இடைநிறுத்தப்பட்ட வேலைகளினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை எடுப்பதற்கு 2018 பெப்ரவரி 23 இல் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் வரிசை அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தல்களினை வழங்கியிருந்தார். அவற்றிற்கான விளம்பரப்படுத்தல் மற்றும் ஆலோசனை சேவைகளுக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.60 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பெந்தோட்டை பிரதேச சபையின் வாராந்த சந்தைக்கான கட்டிடங்களினை நிர்மாணிப்பதற்காக விலைமனுவை அழைப்பதற்கு 2017 யூன் 30 இல் செய்தித்தாள்களில் பெறுகை அறிவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், விலைமனு ஆவணங்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காரணமாக, 2017 திசெம்பர் 31 வரையிலும் விலைமனுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், விலைமனுக்களினை மீள அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

(ஈ) மத்திய மாகாணத்திலுள்ள உட பலத்த பிரதேச சபை மற்றும் உட தும்பர் பிரதேச சபை மற்றும் வட மத்திய மாகாணத்திலுள்ள மிஹிந்தலை பிரதேச சபை மற்றும் தமன்கடுவ பிரதேச சபையின் நீர் விநியோக திட்டங்களின் கீழுள்ள வேலைகள் ரூபா 399.13 மில்லியன் கிரயமொன்றில் 2017 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2018 மே 15 வரையிலும் தொடர்புடைய பிரதேச சபைகளுக்கு நீர் விநியோக திட்டங்களினை கையளிப்பதற்கு ஒப்பந்தகாரரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பூர்த்தியாக்கப்பட்ட பல சிவில் நிர்மாண வேலைகள் உள்ளூராட்சி சபைகளுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு பொது மக்களுக்கு அனுமதிக்க நடவடிக்கை எடுக்காது நீண்ட காலத்திற்கு விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

(அ) மத்திய மாகாணத்தின் நாஉல பிரதேச சபைக்கு ரூபா 50.77 மில்லியன் கிரயமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட பல்தேவைக் கட்டிடங்கள் மற்றும் ரூபா 37.66 மில்லியன் கிரயமொன்றில் வடமத்திய மாகாணத்தில் லங்காபுர பிரதேச சபை மற்றும் புல்நெவ பிரதேசசபையின் வாராந்த சந்தை மற்றும் பொது பஸ் தரிப்பிடத்திற்கு நிர்மாணிக்கப்பட்ட ஏனைய கட்டிடங்கள், பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டிராது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 ½ வருடங்களுக்கும் மேலாக விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஆ) தொடர்ச்சியான நீர் விநியோகத்திற்கான மூலங்களின் பற்றாக்குறை காரணமாக, ரூபா 64.83 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்ட வனத்தவில்லுவ பிரதேசசபையின் நீர் விநியோக திட்டம் 2017 யூன் 30 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து விளைவற்று தொடர்ந்தும் காணப்படுகின்றது. மேலும், ஒவ்வொன்றும் 5000 லீட்டர்கள் கொள்ளளவுடனான 60 நீர்த்தாங்கிகள் மற்றும் ஒவ்வொன்றும் 2000 லீட்டர்கள் கொள்ளளவுடனான 74 நீர்த்தாங்கிகள் ரூபா 58.32 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டு மஹாவ மற்றும் பொடிபிகம பிரதேச செயலகங்களின் பகுதிகளில் 14 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் விநியோக நோக்கங்களுக்கு தொடர்புடைய பிரதேச சபைகளுக்கு எவ்வித நீர்ப்பம்பிகளும் விநியோகிக்கப்பட்டுக் காணப்படாமையினால், 2017 யூன் 30 இலிருந்து தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

(இ) வடமேல் மாகாணத்திலுள்ள ரிதிகம மற்றும் மாவத்தகம மற்றும் தென் மாகாணத்திலுள்ள கம்புறுபிட்டியயில் ரூபா 143.62 மில்லியன் கிரயமொன்றில் மீள் நிர்மாணிக்கப்பட்ட பொது பஸ் தரிப்பிடம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டிராது, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. மேலும், தென் மாகாணத்தின் கடுவானா பிரதேச சபை கிராமத்தில் ரூபா 36.29 மில்லியன் கிரயமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையம் முறையான வீதி நுழைவாயிலொன்றின் பற்றாக்குறை காரணமாக, 2016 மார்ச்சிலிருந்து தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஈ) மத்திய மாகாணத்திலுள்ள லக்கல – பல்லேகம மற்றும் ரட்டோடா மற்றும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள அயகமயிலுள்ள வாராந்த சந்தைகளின் நிர்மாண வேலைகள் ரூபா 49.45 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்டதுடன் 1 ½ வருடங்களுக்கு மேலாக பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்படவில்லை.

(உ) செயற்திட்டத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் சில பகுதிகள் குறித்த நோக்கங்களிற்கு தொடர்புடைய உள்ளூராட்சி சபைகளினால் பயன்படுத்தப்படாமை கள பரீட்சிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டது. ஆகையினால், பொது மக்களின் குறைந்த கேள்விகள் காரணமாக, சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பெல்மதுல்ல, அயகம, தஹவத்த பிரதேச சபைகளில், ஊவா மாகாணத்திலுள்ள பண்டாரவல பிரதேச சபை, மேல் மாகாணத்திலுள்ள வலலபிட்டிய பிரதேச சபை, மத்திய மாகாணத்திலுள்ள ரட்டஹொட பிரதேச சபை, வட மத்திய மாகாணத்திலுள்ள கெப்பற்றிகொல்லாவ பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வாராந்த சந்தைகள் மற்றும் பலநோக்குக் கட்டிடங்களிலுள்ள வியாபார சிறு கடைகள் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. மேலும், மத்திய மாகாணத்திலுள்ள கலதெகர, கங்காவத்த கொரல, அம்மாங்கெகெகொரல மற்றும் உதுகம்புர பிரதேச சபை, சப்ரகமுவ மாகாணத்திலுள்ள இம்புல்பே, கொலன்ன, கேகாலை, இரத்தினபுரி, பலாங்கொட, அயகம மற்றும் கல்கமுவ பிரதேச சபை, மேல் மாகாணத்திலுள்ள பியகம, வலலவிட்டிய மற்றும் மதுரவெல, ஊவா மாகாணத்திலுள்ள லுனுகல மற்றும் கல்மதுல்ல பிரதேச சபை மற்றும் வடமேல் மாகாணத்திலுள்ள பலகல, ஹொரவபொத்தான, நவகந்தகம, ரபேவ மற்றும் பொல்பிதிகம பிரதேச சபைகளினால் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு கட்டிடங்களிலுள்ள கேட்போர்கூடங்கள் நீண்டகாலத்திற்கு தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. அவர்களின் அபிவிருத்தி முன்மொழிவுகளினை மேற்கொள்ளும்

நேரத்தில் பிரதேசத்தின் உண்மையான தேவைகளினை இனங்காணப்தற்கு தொடர்புடைய உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கைகளினை எடுத்திருக்காமையினை சுட்டிக்காட்டுகின்றது.

**3.5 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

-----------------------------------------------------------------

செயற்திட்டத்தின் செயற்பாடுகளினை தொடர்ச்சியாக மீளாய்வதற்கு இயலக்கூடியதாக முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 10 இன் 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு, உள்ளக கணக்காய்வு அலகொன்றினை ஸ்தாபிப்பதற்கு உள்ளகக் கணக்காவாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.